முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

அசல் வழக்கு எண் 122/2013

வா.சா.1 – தெய்வசிகாமணி

31–10–2022 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி

14.11.1918 ம் தேதியிட்ட இறந்துபோன நாச்சியப்ப கவுண்டர் செல்லப்ப கவுண்டர் மகன் நாச்சியப்ப கவுண்டருக்கு எழுதிக் கொடுத்த 3093/1918 என்ற எண்ணாகப் பதிவு செய்யப்பட்ட குத்தகைப் பத்திரத்தின் சார்பதிவாளர் அலுவலக நகல் வா.சா.ஆ.1 ஆகும்.

27.11.1926 ம் தேதியிட்ட இறந்துபோன நாச்சியப்ப கவுண்டர் அவரது மைனர் மகன் சின்னச்சாமி ஆகியோர்கள் சோமசுந்தர செட்டியாருக்கு எழுதிக் கொடுத்த 1726/1926 என்ற எண்ணாக பதிவு செய்யப்பட்ட அடமானக் கடன் பத்திரத்தின் சார்பதிவாளர் அலுவலக நகல் வா.சா.ஆ.2 ஆகும்.

14.09.1942 ம் தேதியிட்ட இறந்துபோன நஞ்சம்மாள் பெயரிலுள்ள 4562/1962 என்ற எண்ணாக பதிவு செய்யப்பட்ட கிரையப் பத்திரத்தின் சார்பதிவாளர் அலுவலக நகல் வா.சா.ஆ.3 ஆகும்.

25.08.1948 ம் தேதியிட்ட இறந்துபோன நஞ்சம்மாள் பெயரிலுள்ள 1737/1948 என்ற எண்ணாக பதிவு செய்யப்பட்ட பாக சாசனப் பத்திரத்தின் சார்பதிவாளர் அலுவலக நகல் வா.சா.ஆ.4 ஆகும்.

மின் கட்டண அளவீடு அட்டை வா.சா.ஆ.5 ஆகும்.

குறுக்கு விசாரணை வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

ஒப்பம்.ஆர்.கார்த்திகேயன்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(பொறுப்பு)
திருப்பூர்.